**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**O.S.No.1976/2023**

**Deposition of witness for DW- 2**

பெயர் : Sathyanarayanan **16.04.2026**
தந்தைபெயர் : Purnachandra Rao
முகவரி : Ramalingeswara Nagar, Vijayawada, Andhra Pradesh.
வயது : 64 years.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 16th day of April 2026

---

**16.04.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**DW2 – வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 10ம் வகுப்பு படித்துள்ளேன். நான் சென்னையில் தான் வசிக்கிறேன் என்றாலும், விஜயவாடாவில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. சென்னையில் நெ.11/9, Green Avenue, 3rd Floor, Thiruvettriyoor, Tollgate, Chennai என்ற விலாசத்தில் தற்காலிகமாக வசிக்கிறேன். 2009 லிருந்து இன்று வரை மேற்கண்ட முகவரியில் தான் வசித்து வருகிறேன். நான் மேற்கண்ட முகவரியில் வசிக்கவில்லை என்றாலும், விஜயவாடாவில் தான் நிரந்தரமாக வசித்துவருகிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி வெங்கட்ரமணா டிராவல்ஸில் கிளார்க்காக 2009 முதல் தற்போது வரை வேலை செய்து வருகிறேன். தாவா சொத்தின் விலாசம் கடை எண்.5 and 7, Somasundaram Playground Back side, Ranganathan Street, T.Nagar, Chennai என்ற விலாசத்தில் உள்ளது. வாதிக்கு வாடகையை செலுத்துவது யார் என்றால் நானே 2014 முதல் 2018 வரை கொடுத்து வந்தேன். வாடகையை ரொக்க பணமாக கொடுத்து

வந்தேன். வங்கி மூலம் செலுத்தவில்லை. பி.சா.1 மெடிகுண்டா ராமகிருஷ்ணா என்னுடைய ஓனர் ஆவார். எனக்கு ஆரம்பத்தில் ரொக்க பணமாகவும், பிறகு வங்கி மூலமாகவும் சம்பளம் கொடுத்து வருகிறார். நான் பி.சா.1 மெடிகுண்டா ராமகிருஷ்ணாவுக்கு எதிராக சாட்சியம் அளித்தால் என்னுடைய வேலை போய்விடும் என்றால் சரிதான். பி.சா.1 ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.சா.1 இவ்வழக்கு விவரங்களை என்னிடம் சொல்லி இருக்கிறார் என்றால் சரிதான். வழக்கு விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் எனக்கே தெரியும். பி.சா.1 எப்பொழுதெல்லாம் நீதிமன்றத்திற்கு வருகின்றாரோ அப்பொழுதெல்லாம் அவருடன் நானும் வருவேன் என்றால் சரிதான். நான் வாதிக்கு வாடகை கொடுத்ததற்கான அக்கவுண்ட் பராமரிக்கிறேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி நிறுவனத்தில் நான் கிளார்க்காக வேலை செய்வதால் எனக்கு கணக்கு வழக்குகளை பற்றி எந்த விவரமும் தெரியாது என்றால் சரியல்ல. மாத வாடகை ரூ.15,000/-. முன்தொகை ரூ.1,50,000/-. தற்போதைய வாடகை ரூ.20,000/- என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கொரனா காலகட்டத்தில் நாங்கள் வாடகையை செலுத்தவில்லை என்று கூறியிருக்கும் நிலையில் எந்த காலகட்டத்தில் நாங்கள் வாடகை செலுத்தவில்லை என்றால் அப்போது நான் விஜயவாடா சென்று விட்டதால் தெரியாது. அந்த காலகட்டத்தில் நான் வாடகையே செலுத்ததால் தான் எனக்கு எந்த விவரமும் தெரியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 தாவா சொத்தின் புகைப்படம் என்றால் சரிதான். அது மிகவும் பழையமான கட்டிடம் என்றால் சரியல்ல. கட்டிடம் நன்றாகதான் உள்ளது. தாவா கட்டிடம் தரை தளத்தில் உள்ளது. தாவா கட்டிடத்தில் மொத்தம் எத்தனை கடைகள் இருந்தன என்று எனக்கு தெரியாது. நான் வால்டாக்ஸ் ரோட்டில்

உள்ள அலுவலகத்தில் வேலை செய்வேன். தாவா சொத்தில் உள்ள கட்டிடத்தில் நான் வேலை செய்யாததால் எனக்கும், வழக்கு சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள கட்டித்தில் 2014 முதல் 2018 வரை வேலை செய்தேன். இந்த விவரத்தை என் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. இன்றைய தேதி வரை வாதிக்கு வாடகை பாக்கி இருக்கிறது என்றால் சரியல்ல. வாடகை பாக்கி இல்லை. எனக்கு வழக்கு விவரங்களே தெரியாமல் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

// SD//

IV Addl. Sessions Judge.
16.04.2026 IV Additional Court.